பல நோயாளிகளை ஒரு வாரம், இரண்டு வாரம் வைத்திருந்துவிட்டு, பிறகு வெளியே அனுப்பிவிடக்கூடிய நிலை இருப்பதை அரசாங்கம் போக்க முயற்சிக்குமா? அதற்கென்று கமிட்டியொன்று இருப்பதாக நான் அறிகிறேன். அத்தகைய கமிட்டி இல்லை என்று அமைச்சர் அவர்கள் கூறுகிருர்கள். அப்படியானால், எந்த நோயாளிகளைச் சேர்க்கலாம் என்பதற்கு ஏதாவது முறை வகுக்கப்படுகிறதா் என்ற நிலையை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : கேள்வி, கோவை மாவட்டத்தைச் சேர்ந்த பெருந்துறை மருத்துவ மனையைப்பற்றியது. ஆனால், கனம் உறுப்பினர் போடுகின்ற கேள்வியோ வடார்க்காடு மாவட்டத்திலிருக்கும் மருத்துவ மனையைப்பற்றி. அதற்குத் தனிக் கேள்வி போட்டால் விவரம் அளிக்கலாம்.

சுவாமிமலையில் வெண்கலச் சிலைகள் தயாரிப்பு.

* 176 வினு : திரு. பெ. மலைச்சாமி : மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சுவாமிமலையில் உள்ள வெண்கலச்சிலை தயாரிப்பு நிலையத்தில் 1967-ம் ஆண்டில் எத்தனை, எத்தகைய சிலைகள் செய்யப்பட்டன ?

(இ) இவற்றால் கிடைத்த வருவாய் எவ்வளவு ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : (அ) விதவிதமான எழுபத்தெட்டு வெண்கலச்சிலைகள் உற்பத்தி செய்யப்பட்டன.

(இ) அந்த எழுபத்தெட்டு வெண்கலச்சிலைகளில் ரூ. 21,206·90 விலையுள்ள ஐம்பது சிலைகள் விற்பனை செய்யப்பட்டன. இதனால் ரூ. 1,276·94 லாபம் கிடைத்தது.

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, கடவுள் உருவம் பதித்த சில சிலைகளுக்கு வெளி நாடுகளில் நல்ல வரவேற்பு இருக்கும் காரணத்தால் தமிழகத்திலுள்ள அத்தகைய சிலைகளைச் சில பேர் திருடி வெளி நாடுகளுக்கு அனுப்புகிருர்கள் என்பது உண்மையா ? அதைத் தடுப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : திருடுகின்றதையும் ஒரு தொழிலாகக் கொண்டுள்ளவர்களும் இருக்கத்தான் செய்கிருர்கள். அவர்கள் இத்தகைய சிலைகளையும் திருடுவதை மேற்கொண்டிருக்கலாம். அதையெல்லாம் தடுக்க அப்போதைக்கப்போது நம்முடைய காவல் துறை நடவடிக்கை எடுத்து வருகிறது.

New College for Rajapalayam

* 177. Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state :

(*a*) the number of colleges in the various districts under the jurisdiction of Madurai University;

(*b*) whether any representation has been received recently from Rajapalayam for the starting of a college; and

(*c*) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு செ. மாதவன் :

(அ)	மதுரை	14
	திருநெல்வேலி ..	17
	இராமநாதபுரம் ..	9
	கன்யாகுமரி ..	8
		48